[8th November 1965

Bifurcation of Panchayats

* 359 *Q*.—Sri C. SRINIVASAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) the number of panchayats for which petitions for bifurcations were received during October and November 1964;

(*b*) the number of panchayats bifurcated consequently; and

(*c*) the procedure adopted in these bifurcations ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) & (இ) இம்மாநிலத்தில் உள்ள 101 பஞ்சாயத்துக்கள் விஷயமாக, அவை ஒவ்வொன்றையும் இரண்டாகப் பிரிக்கும்படி கேட்டு 1964 அக்டோபர், நவம்பர் மாதங்களில் மனுக்கள் வந்துள்ளன. அவற்றில் பத்துப் பஞ்சாயத்துக்கள் விஷயமாக, அவை ஒவ்வொன்றையும் இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்புகளுக்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்தது.

(உ) ஒரு பஞ்சாயத்தை இரண்டாகப் பிரிக்க 1953-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் 3-வது பிரிவு, மேற்பார்வையாளருக்கு அதிகாரமளிக்கிறது. ஒரு பஞ்சாயத்தை இரண்டாகப் பிரிப்பதற்கெதிராகக் காரணம் காட்டும்படி சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கும் பஞ்சாயத்து யூனியனுக்கும் நியாயமான வாய்ப்பளித்த பிறகே அந்தப் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும். மேற்பார்வையாளருடைய அதிகாரங்களை இப்போது சென்னை, கூட்டு அபிவிருத்திக் கமிஷனர் (Joint Development Commissioner) செயலாற்றுகிறார். ஒரு பஞ்சாயத்தில் வரி செலுத்துபவர் அல்லது அங்கு வசிப்பவர் யாரேனும் அந்தப் பஞ்சாயத்து இரண்டாகப் பிரிக்கப்படுவதற்கு மறுப்பு தெரிவிக்க விரும்பினால், அவர் அரசாங்கத்துக்கு மேல் முறையீடு செய்து கொள்ளவும் இச் சட்டம் வகை செய்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, பத்து பஞ்சாயத்துக்கள் இரண்டாகப் பிரிக்கப்படுவதற்கான திட்டம் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தப் பத்துப் பஞ்சாயத்துக்கள் யாவை என்பதை அறியலாமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : செங்கற்பட்டு மாவட்டத்தில் செம்பாக்கம், அத்திபூர், தென்னாற்காடு மாவட்டத்தில் புளிச்சப்பள்ளம் ஊ.அகரம், வடாற்காடு மாவட்டத்தில் மோட்டூர், தஞ்சை மாவட்டத்தில் செட்டிசத்திரம், அய்யம்பேட்டை, திருச்சி மாவட்டத்தில் பாப்பாக்குடி, இராமநாதபுரம் மாவட்டத்தில் மேலசெம்பொன்மாரி, திருநெல்வேலி மாவட்டத்தில் சிந்தலக்கரை, வயாலி ஆகிய பஞ்சாயத்துக்கள் இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன.

திரு. வி. எஸ். எஸ் மணி : ஒவ்வொரு ரெவின்யூ கிராமமும் ஒரு தனிப் பஞ்சாயத்தாக அமைய வேண்டும் என்ற விதி இருக்கிறது. 8,500 ஜனத்தொகை கொண்ட 50,000 ரூபாய் வருமானம் உள்ள நகரப் பஞ்சாயத்தாக ஆவதற்கு வாய்ப்பு உள்ள மதுரை மாவட்டத்தில் பண்ணைக்காடு என்கிற கிராமம் இதுவரையில் பஞ்சாயத்தாக அமையவில்லை. அதற்குக் காரணம் என்ன? இதில் ஏதாவது அரசியல் விளையாடுகிறதா ?

8th November 1965]

கனம் திரு. கோ. பூவராகன்: தனிப்பட்ட ஒரு கிராமத்தைப் பற்றிக் கனம் அங்கத்தினர் கேள்வி கேட்கிறார்கள். தனிக் கேள்வி கேட்டால், பரிசிலித்து, அது ஏன் இன்னும் பஞ்சாயத்தாக அமையவில்லை என்று கண்டறிந்து பதில் சொல்லலாம்.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, தேர்தல் நடந்த பிறகு தற்போதுள்ள ஒரு பஞ்சாயத்தை இரண்டு பஞ்சாயத்தாகப் பிரிக்க வேண்டுமென்று மனு வந்தால் அரசாங்கம் அதைக் கவனித்து நடவடிக்கை எடுக்குமா? 9-30 a.m.

கனம் திரு. கோ. பூவராகன்: 1964 அக்டோபர், நவம்பர் மாதங்களில் வந்த மனுக்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற கேள்விக்கு நான் பதில் சொன்னேன். 'இனிமேல் பஞ்சாயத்துகளைப் பிரிக்க வேண்டும் என்பதற்கு மனுக்கள் வந்தால்' என்பது பற்றி தனிக் கேள்வியாகப் போட வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன் ஜீப்புக்கள்

* 360 கேள்வி.—திரு. இரா. நாராயணன்: கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியன்கள் உபயோகித்து வரும் ஜீப்கார்களின் நாட்குறிப்புப் புத்தகங்கள், அவைகளுக்காக ஆகும் எண்ணெய் செலவுக் கணக்குகள் அந்தந்த பஞ்சாயத்து யூனியன் கூட்டங்களின் போது அவைகளின் பார்வைக்கு வைக்கும்படி அண்மையில் அரசாங்கம் உத்தரவு ஏதேனும் பிறப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், திருச்சி மாவட்டத்திலுள்ள வேப்பூர் பஞ்சாயத்து யூனியனில் இம்முறை பின்பற்றப்படாததை அரசாங்கம் அறியுமா?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. மாதவன்: பஞ்சாயத்து யூனியன்களுக்காகக் கொடுக்கப்பட்டுள்ள ஜீப்புகளை எவ்வாறு உபயோகப்படுத்துகிறார்கள் என்று கண்காணிக்கும் பொறுப்பு பஞ்சாயத்து யூனியன் உறுப்பினர்களுக்கு இல்லை என்று சொல்கிறார்கள். அதனால் சினிமா தியேட்டர்களின் முன்பு எல்லாம் கூட ஜீப்புகள் நிற்பதைப் பார்க்கிறோம். அந்த ஜீப்புகள் உபயோகப்படுத்தும் விதத்தைக் கண்காணிக்க அந்த மன்றத்திற்கு இனியாகிலும் உரிமை வழங்கப்படுமா?

கனம் திரு. கோ. பூவராகன்: மேல் அதிகாரிகள் தணிக்கை செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம். அதனாலே தான் யூனியனிடத்தில் இந்தப் பொறுப்பு விடப்படவில்லை.

புலவர் கா. கோவிந்தன்: தேசிய நெருக்கடியைக் காரணம் காட்டி சில பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த ஜீப்புகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக அந்த அந்தப் பஞ்சாயத்து யூனியன்களின் வேலை பாதிக்கப்